9th August 1966]

திரு. செ. மாதவன் : இப்படி போஸ்டுகள் அனுமதிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன ? காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே சொன்ன மாதிரி இந்த மெதெட் ஆப் ரெக்ரூட்மெண்டு, குவாலிஃபிகேஷன் இவைகளையெல்லாம் டிஸைட் பண்ணின பிறகுதான், அவர்களை அப்பாயிண்ட் செய்ய முடியும்.

* 281 கேள்வி.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 கல்வியாண்டிலிருந்து 1965 கல்வியாண்டுவரை எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில், ஆதித்திராவிட மாணவர்கள் எத்தனைபேர் ?

(உ) எத்தனை சதவிகிதம் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 1,841.

(இ) 164.

(உ) 9 சத விகிதம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் இடம் கொடுக்கும்பொழுது 16 சத விகிதத்திற்குக் குறையாமல் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடைமுறையிலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். மொத்தம் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று வெளிவந்த டாக்டர்கள் 1,341 பேர்களில், 164 பேர்கள்தான் ஆதிதிராவிடர்கள் என்று சொல்கிறார்கள். சதவிகிதத்தைக் கேட்டால் 9 சதவிகிதம் சொல்லியிருக்கிறார்கள். பதினாறு சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பதினாறு சதவிகிதத்தினருக்கு அட்மிஷன் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்தும், சிலர் தேறவில்லை என்றால் யார் பொறுப்பு ? அதனால் தான் 9 சத விகிதம் இருக்கிறது.

* 282 *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of students admitted in Medical Colleges in the State in 1965–66, from among the Harijans, the Backward Communities and Forward Communities?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஹரிஜனங்கள் 135.

பின்னிலை வகுப்பினர் 230.

முன்னிலை வகுப்பினர் 554.